Koviloor Digital Library

39 பேர்

KOVILOOR LIBRARY, KOVILOOR

No. 45817

91/1

ஓம்
சிவமயம்

தமிழ் நாட்டுத் துறவிகள் சங்கத்தின்

இரண்டாவது மாநாட்டின் நிகழ்ச்சியும் தீர்மானங்களும்

நிகழும் விய ஆண்டு கார்த்திகைத்திங்கள் 21, 23-ம் நாள் (6, 8-12-1946) வெள்ளிக்கிழமை ஞாயிற்றுக்கிழமைகளில், திருவண்ணாமலையில் அண்ணாமலையார் கோவிலுள் சத்தி விலாச சபா மண்டபத்தில் தருமபுரம் ஆதீனத்தைச் சார்ந்த, திருச்சி மௌனகுரு மடம், உயர்தவத்திரு. மௌனம் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவைத் தலைமையின்கீழ் '**தமிழ்நாட்டுத்துறவிகள் சங்கத்தின்**' இரண்டாவது மாநாடு நடைபெற்றது- இம்மாநாட்டுக்கு, தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பல மடங்களிலிருந்தும் பல துறவிகளும் இல்லறத்திலுள்ள சமயப் பெரியோர்களும், அன்பர்களும், தாய்மார்களுமாக, சுமார் (2500) இரண்டாயிரத்தைந்நூறு பேர்கள் வரையில் வந்து குழுமியிருந்தார்கள். தமிழ் நாட்டுத் துறவிகள் திருக்கூட்ட ஊர் வலம் காலை 7-மணிக்கு மேல் சாதுக்கள் சத்திரத்திலிருந்து, கோயில் யானை, விருது, கொடிகள், பாண்டு, மௌவாத்திய முதலிய முன்னணியுடன் புறப்பட்டுச் சாதுக்கள் அன்பர்கள் தமிழ்மறைஓதலுடன் மாட வீதியை வலமாக வந்து சத்தி விலாச சபாமண்டபத்துட் சென்றமர்ந்தது.

Acc·No·45817

மாநாட்டு நிகழ்ச்சிகள்

காஞ்சிபுரம் திருநெறித் தமிழிசை வேந்தர், திரு. பு. ஆ. விநாயக முதலியார் தமிழ்மறை ஓதிக் கடவுள் வணக்கஞ் செய்தார்கள்.

திருவண்ணாமலைத் தேவாலய அறக்காப்பாளர் திரு. D. S. முத்துக்குமாரசாமி முதலியாரவர்கள் திறப்புரையாற்றி மாநாட்டைத் திறந்து வைத்தார்கள்.

Koviloor Digital Library

உயர்தவத் திரு. மௌனம் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவைத்தலைமை வகித்து தலைமையுரையாற்றினார்கள்.

சங்கச் செயலாளரவர்களால் ஆண்டு அறிக்கை படிக்கப்பட்டது. அதன் பின் 'துறவிகள் பணி' 'தீவிர முயற்சி' 'அடியார் கடமை' 'உலக நிலைமையும் நமது கடமையும்' 'தற்காலம் நாம் செய்யவேண்டிய வேலைகள்' 'சமயத் தொண்டே துறவிகட்கின்றியமையாக்கடமை' என்பன பற்றி, முறையே, சென்னை, சைவசித்தாந்த சமாசத் தலைவர், திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் கோவைத் திரு திரு. C. M. இராமச்சந்திர செட்டியார், காஞ்சிபுரம் பொன் குமாரசுவாமி அடிகள், பெருஞ்சொற்கொண்டல் புரிசை திரு. சு. முருகேச முதலியார், சித்தூர் எர்ரேபல்லை அக்காச்சிரமம் உயர்திரு. சாந்தானந்த அடிகள், ஆரணி தமிழாசிரியர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், முதலான பெரியார்கள் மிகத்தீவிரமாகவும் ஆர்வத்தோடும், விரிவாகப் பேசினார்கள். இத்துடன் முதல் நாள் மாநாடு முடிந்தது. இதைத்தொடர்ந்து (8—12—'46) ஞாயிறு மாலை 3-மணிக்கு மீண்டும் மாநாட்டின் பிற்பகுதிக்கூட்டம் கூடியது. பழனி உயர்திரு. நித்தியானந்த சுவாமிகள், கோவை உயர்திரு. நமசிவாய சுவாமிகள் இருவரும் தமிழ்மறை ஓதிக்கடவுள் வாழ்த்துச் செய்தார்கள். தலைவரவர்கள், தலைமையுரையாக, சங்கத்தின் மூலம் நாம் செய்யவேண்டிய பணிகளும் தீர்மானங்களும், என்பதுபற்றிப் பேசினார்கள். அதன்பின் செயலாளர், சுவாமி 'அருணகிரிநாதர்' 'காலநிலையும் துறவிகள் தொண்டும்' என்பதுபற்றி மிகத்தீவிரமாக விரிவாகப்பேசி முடித்து அடியிற்கண்ட தீர்மானங்களைப் படித்தார்கள் அத் தீர்மானங்களின் மீது தலைவரவர்களும் புரிசை திரு. சு. முருகேச முதலியாரவர்கள், காரைக்குடி திரு. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள். திருவண்ணாமலை திரு. அண்ணாமலை பிள்ளை, M.L.A., அவர்கள் உயர்திரு. சாந்தானந்த சுவாமிகள் உயர்திரு. கோவை. நமசிவாய சுவாமிகள் திருவண்ணாமலை செயலட்சுமி அச்சகம் தலைவர் திரு. வேணுகோபால் நாயுடு அவர்கள். துணைத்தலைவர், ஈசானிய மடாதிபதி உயர்திரு. நடேச சுவாமிகளவர்கள் முதலானவர்கள் பேசி வாதிட்டுச் செய்த சில திருத்தங்களுடன். மாநாட்டில் ஒருமனதாக அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. செயலாளரவர்களால் நன்றி கூறப்பட்டு கடவுள் வாழ்த்துடன் "தமிழ் நாட்டுத் துறவிகள் சங்கத்தின்" இரண்டாவது மாநாட்டு நிகழ்ச்சிகள் அண்ணாமலையார் திருவருளால் இனிது முடிவு பெற்றது.

Koviloor Digital Library

மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்கள்

(1) இந்துக்களின் கோவில்களிலும் மடாலயங்களிலும் வரும் உபரிவருமானத்தை (அதாவது மிகுதிப்பணத்தை) பொதுக் கல்வித் திட்டத்திற்குச் செலவிட வேண்டுமென்று தற்காலச் சென்னை அரசியலார் வெளியிட்டிருக்கும் கொள்கையை இத் துறவிகள் மாநாடு மறுக்கின்றது. (ஏகமனதில்)

(2) இந்துசமய அறநிலையங்கள் செவ்வனே நடைபெறுவதற்காகச் சமயப்பற்றும், அறப்பண்பும் உடையவர்களால் அன்புகூர்ந்து அளிக்கப்பட்ட தானச் சொத்துக்களிலிருந்து அவ் அறநிலையங்களின் அறப்பணிகள் நடைபெறுகின்றன. ஆதலால் ஒவ்வொரு அறநிலையங்களிலும் குறிப்பிட்ட அறப்பணிகள் சரியான முறையில் சரிவர நன்கு நடைபெறுகின்றதா? எனக் கண்காணிப்புச் செய்யவேண்டியது. அவ்வச்சமய மக்களுடையவும் அரசாங்கத்தாருடையவும் கடமைகளாகும். அவ்வாறில்லாமல் அறநிலையங்களிலுள்ளவர்கள் செய்யவேண்டிய அறப்பணிகளைச் செவ்வனே நடத்துதற்குரிய திறமையின்மையாலோ, தன்னலத்தாலோ சரிவரச் செலவு செய்யாத வகையில் மிதியாகவுள்ள பொருளை வேறுவகையிற் செலவிட அரசாங்கத்தார் திட்டம் போடுவது நீதியன்று. ஆகவே தேவாலய. மடாலயங்களின், உபரி வருமானத்தை (மிதிப்பொருளை), ஆலயங்களின் நித்திய, நைமித்திக பூசைகட்கும், திருவிழாக்கட்கும், ஆலயங்களைப் பழுதுபார்த்தல், திருத்தியமைத்தல், முதலிய திருப்பணிகட்கும், சமயப்பிரசாரம், சமய நூற்பதிவுகட்கும், சமயக்கல்விக்கும், அவ் வட்டத்தில் போதியவருவாயின்றி பூசையின்றியும், பழுதுபட்டு மிருக்கும். ஆலயங்களின் பூசைக்கும், திருப்பணிகட்கும், சரிவரச் செலவு செய்யும்படி செய்து, மீதியிருந்தால், அப்பொருளை இந்து பிள்ளைகளின் கல்விக்கே உபயோகப்படுத்த வேண்டுமென, இம் மாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கின்றது.

(3) "தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கம்" என்றென்றும் நிலைத் திருக்கும்பொருட்டு உடனே சட்டப்படி பதிவு செய்யவேண்டும். பதிவுசெய்யும் செலவிற்காக சங்கத்தின் பொருளிலிருந்து வேண்டிய தொகையைச் செலவுசெய்யவும் காலந்தாழ்த்தாமல் பதிவு செய்யவும் தலைவரவர்களையும்செயலாளரவர்களையும்கேட்டுக்கொள்வதுடன் சங்கத் தலைமைநிலையம் திருவண்ணாமலையிலும் கிளை நிலையங்கள் பிறவிடங்களிலும் அமைக்க வேண்டுமெனத் தீர்மானிக்கின்றது.

(4) "தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கத்திற்கு" "காப்பாளர் குழு" ஒன்று நிறுவி அதில் (25) இருபத்தைந்து ரூபாய் ஆண்டுக் கட்டணமாகக்கொடுக்கும் இல்லறத்தார்களும் பொருள்மிகவுடைய

துறவிகளும் நிரந்தரக்காப்பாளராகவும் (10) பத்து ரூபாய் ஆண்டுக்கட்டணமாகக் கொடுப்பவர்களை பொதுக்காப்பாளராகவும் ஆவார்களெனத் தீர்மானிக்கப்பெற்றது.

(5) மேற்கண்ட இருவகைக்காப்பாளர் குழுவிலிருந்து

(1) கோவை திருவாளர் C. M. இராமச்சந்திர செட்டியார் B.A, B. L.

(2) கோவை திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியார் B. A, அவர்கள்

(3) புரிசை திருவாளர் சு. முருகேச முதலியாரவர்கள்

(4) வேலூர் திருவாளர் ச. சச்சிதானந்தம்பிள்ளை B. A, L.T., அவர்கள்

(5) காஞ்சிபுரம் பங்கிட்டு அலுவலர் திருவாளர் கி. இராமலிங்க முதலியார் M.A., அவர்கள்

(6) ஜமீந்தார் திருவாளர் இராமசாமி செட்டியார், M. L. C, அவர்கள்

(7) திருவண்ணாமலை திருவாளர் N. அண்ணாமலைபிள்ளை, M. L. A., அவர்கள்

ஆகிய 7பேர்களையும் தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கத்தின் உதவி (ஆலோசனை)க்குழுவினராக (அட்வைசரி கமிட்டியினராக) இருக்கும்படி தீர்மானிக்கின்றது.

(6) துறவிகள் சங்கத்துவெளியீடாக ஓர்மாதவெளியீட்டுத் தான் நடத்தவேண்டுமெனத் தீர்மானிக்கின்றது.

(7) அரசியல் மந்திரிசட்டசபையிலும் மாகாணச் சட்டசபைகளிலும் பல்கலைக்கழகத்திலும் தமிழ்நாட்டுத் துறவிகளுக்கு ஓர் இடம் தரவேண்டுமென அரசாங்கத்தாரை இச்சங்கம் கேட்டுக்கொள்கின்றது.

(8) இந்து அறநிலையங்களின் பாதுகாப்புச் சங்கத்தில் (Hindu Religious Endowment Board) இந்துசமயப் பற்றும், சமயப்படிப்பும், சமய ஒழுக்கமும் உள்ளவர்களையே, அலுவலில் (உத்யோகத்தில்) நியமிக்கவேண்டுமென அரசாங்கத்தாரை இச்சங்கம் கேட்டுக்கொள்கின்றது.

(9) சினிமாப்படக்காட்சிகளில் சமய சம்பந்தமான தெய்வங்களையும், அடியார்களையும், இழிவுபடுத்தும் வகையிலும், உண்மை வரலாற்றுக்கு முரண்பாடாகவும், படம் பிடித்துக்காட்டக்கூடாதெனவும், அவ்வாறுபிடித்தபடங்களைத் தணிக்கைசெய்யும் அதிகாரிகள் வெளியிடவிடா

Koviloor Digital Library

மல் தடுத்துவிடவேண்டுமெனவும் படம்பிடிப்போர்களையும் தணிக்கைசெய்யும் அரசியல் கழகத்தாரையும் இரக்கம் கேட்டுக்கொள்கிறது.

(10) சங்கத்தின் செயல் நிறைவேற்றுக் குழுவினர் 7-பேர்களாக இருப்பதை 11-பேர்களாகக்கூட்டி அமைக்க வேண்டுமென்றும் அவ்வாறு சேர்க்க வேண்டியவர்களைத் தலைவர் துணைத்தலைவர் செயலாளர் ஆகிய மூவர்களும் கலந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளலாமெனத் தீர்மானிக்கிறது.

(11) ஷை செயல் நிறைவேற்றுக்குழுவினர் 11-பேர்களையும் ஆண்டுக்கொருமுறை மாநாடு கூடுங் காலத்தில் மாற்றியமைக்கும்படி தீர்மானிக்கின்றது.

செயல் நிறைவேற்றுக் குழுவினர்

(1) தலைவர்:- மௌனம் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், மௌன மடம், திருச்சி.

(2) உபதலைவரும் பொருளாளரும் நடேச சுவாமிகள் ஈசானிய மடம், திருவண்ணாமலை.

(3) செயலாளர் சுவாமி அருணகிரி நாதன் சாது நாராயண தேசிகர் மடாலயம், சென்னை.

(4) துணைச்செயலாளர் முத்தானந்த அடிகள், சென்னை.

(5) வேலாயுத சுவாமிகள். பவழக்குன்று மடம். திருவண்ணாமலை.

(6) பெருமாள் சுவாமிகள் துர்க்கையம்மன் கோயில் பூந்தோட்டம், திருவண்ணாமலை.

(7) சாந்தானந்த சுவாமிகள் ஆனந்தாச்சிரமம் எர்ரே பல்லே, சித்தூர்.

(8) வீர. சு. அநந்தாநந்த சுவாமிகள் வீர. சுப்பைய சுவாமிகள் மடம், வேப்பேரி, சென்னை.

(9) முத்தைய்யா சுவாமிகள் பொன்னம்பல சுவாமிகள் மடம், சிதம்பரம்.

(10) சபாபதி சுவாமிகள் மௌனசுவாமிகள் மடம், சிதம்பரம்.

(11) வீர. சு. சண்முக சுவாமிகள் தட்சிணாமூர்த்தி சுவாமிகள் மடம், திருவாரூர்.

Koviloor Digital Library

உதவி (ஆலோசனை)க் குழுவினர்

(1) கோவை திரு. C. M. இராமச்சந்திர செட்டியாரவர்கள் B.A., B.L.

(2) கோவை திரு. C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள் B.A.

(3) புரிசை திரு. சு. முருகேச முதலியாரவர்கள்.

(4) வேலூர் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் B.A., L.T.

(5) காஞ்சிபுரம் பங்கிட்டு அலுவலர் திரு. கி. இராமலிங்க முதலியாரவர்கள் M. A.

(6) ஒமந்தூர் திரு. இராமசாமி ரெட்டியாரவர்கள் M. L. C.

(7) திருவண்ணாமலை திரு. N. அண்ணாமலைப்பிள்ளையவர்கள் M. L. A.

வேண்டுகோள்

இதைக் கண்ணுறும் தமிழ்நாட்டுத் துறவிகள் இச்சங்கத்தில் உறுப்பினராகவும் இல்லறத்தில் வாழ்கின்ற தமிழ் நன்மக்களும் பிறரும் சங்கக்காப்பாளர் குழுவுறுப்பினராகவும் சேர்ந்து உதவி புரிந்தும் ஒத்துழைத்தும் ஊக்கமளித்தும் சங்கத்திற் குறுதுணையாயிருந்து சங்கத்தை வளர்க்குமாறு எல்லாம்வல்ல இறைவன் இன்னருள் புரிய வேண்டுகின்றோம்.

தலைவர்,
மௌனம். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள்,
மௌனமடம், திருச்சி.

இங்ஙனம்,
சுவாமி அருணகிரிநாதன்,
செயலாளன்,
தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கம்.

சங்கத் தலைமை நிலையம்,
ஈசானிய (எதிர்) மடம்,
திருவண்ணாமலை.

செயல் நிலையம்,
சாது நாராயண தேசிகர் மடாலயம்,
202, திருவொற்றியூர் ஐரோடு,
சென்னை.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
45817

ஸ்ரீ நிலயம் பிரஸ், காஞ்சிபுரம். Q. H. Ct. 437-1000